சுருக்கம்

கலையும் பண்பாடும் – தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண். 181

நாள் 29.11.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், கார்த்திகை–13

படிக்கப்பட்டது :–

கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.3953/இ1/2019, நாள் 24.09.2019.

*******

ஆணை:-

நாட்டுப்புறக் கலை வடிவங்களை போற்றி, பேணிப் பாதுகாத்தல், கலைகளை பரப்பும் கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், அழிந்து வரும் தொன்மையான கலை வடிவங்களை ஆவணமாக்குதல், சமுதாயத்தில் நலிந்த நிலையில் வாழும் திறமைபெற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், நிகழ்த்துக் கலைகளை கலை நிகழ்ச்சிகள் மூலமாக பொது மக்களிடையே கொண்டு செல்லுதல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது.

2. 15.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019–2020ஆம் ஆண்டு கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "தொன்மை சிறப்புமிக்க தமிழக கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.5000/– வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25 இலட்சமும், கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000/– வீதம் 100 கலைக்குழுக்களுக்கு ரூ.10 இலட்சமும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் வழங்கிட தொடராச் செலவினமாக ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

3. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தும்

(த.பி.பா)

கலைஞர்களுக்கும் இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 16 வயது நிரம்பியவராகவும், 30 வயதுக்குட்பட்டவராகவும் இருக்கும் திறன்படைத்த 500 இளம் கலைஞர்களுக்கு தலா ரூ.5000/– வீதம் நிதியுதவி மன்றத்தால் வழங்குவதற்குத் தேவையான ரூ.25.00 இலட்சம் நிதியினையும், சிறப்புறச் செயல்படும் பதிவு செய்யப்பட்ட 100 கலைக்குழுக்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் வழங்குவதற்கு ரூ.10.00 இலட்சம் நிதியினையும், ஆக மொத்தம் ரூ.35.00 இலட்சம் தொடராச் செலவினமாக 2019–2020ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து உரிய அரசாணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தொன்மை சிறப்புமிக்க தமிழக கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கிராமியக் கலைஞர் ஒவ்வொருவருக்கும், ரூ.5000/– வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25.00 இலட்சமும், கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000/– வீதம் 100 கிராமியக் கலைக்குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சமும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் வழங்கிட 2019–2020ஆம் நிதியாண்டில் தொடராச் செலவினமாக ரூ.35,00,000/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2205 – 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினம் – AH தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு மானியங்கள் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
> (பு.த.தொ.கு 2205 00 102 AH 30903)
> (ப.த.தொ.கு 2205 00 102 AH 0938)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதி ரூ.35,00,000/–ஐ 2019–2020–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கம் சிறப்பு நிகழ்வாக ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2019–2020ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019–2020 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019–2020) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II/வ.செ.பொது–I)த் துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் இத்திட்டத்தினை நிறைவேற்றி, அதன் பின்னர், இதற்காக ஏற்பட்ட உள்ளபடியான செலவின விவரங்கள் மற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்த அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய பயனீட்டுச் சான்றிதழ், புகைப்படங்கள், செய்தி நறுக்குகள் ஆகிய மேற்காணும் விவரங்களை மண்டலக் கலை பண்பாட்டு

மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண்.57446/நிதி(கல்வி–II)த் துறை/2019, நாள் 29.11.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 2320 (இரண்டாயிரத்து முன்னூற்று இருபது)

(ஆளுநரின் ஆணைப்படி)

அஷோக் டோங்ரே
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை –8.
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை –28.
உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை –28.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA/ E&RSA/A&E), சென்னை–18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9
நிதி(கல்வி–II/ வ.செ.பொ.I)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது)த் துறை, சென்னை– 9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.12.2019
பிரிவு அலுவலர்
2.12.19